[1971 டிசம்பர் 16

Hospital at Theni-Alingar

* 458 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that there is only one Doctor in the Hospital at Theni-Alinagar; and

(*b*) if so, the steps taken by the Government to increase the number of Doctors to meet the increasing need?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களே தேனிக்குச் சென்றிருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரி நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஒரே ஒரு டாக்டர் மட்டும்தான் இருக்கிறார், அது போதாது. ஆகவே இரண்டு அல்லது 3 டாக்டர்களாவது இருந்தால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலிலே ஒரு டாக்டராவது அங்கே இருக்கவேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டு 7—5—1971 அன்று இருந்து டாக்டர் பாரதி என்பவர் நியமிக்கப்பட்டு செம்மைபெற்றுவிட்டது. இரண்டாவது டாக்டரும் வேண்டுமென்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது நடைமுறைக்கு வரும்பொழுது ஒரு பெண் மருத்துவர் நியமிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கு உரிய நேரத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சிக்கு ஆண்கள்.

* **459 வினு.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மருத்துவத்துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எந்த ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவத் துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தற்காலிகமாக 1958-ம் ஆண்டு முதல் நிறுத்திவைக்கப்பட்டது. தற்காலிகமாக தொடர்ந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் ஆண் நர்ஸ்களுடைய சேவை மிக இன்றியமையாததாக இருக்கிறது. ஆண்டு தோறும் குறைந்தபட்ச எண்ணிக்கையிலாவது ஆண் நர்ஸ்களைத் தெரிந்தெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.